Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 20 (05 - 08 - 1991) திங்கட்கிழமை ஓசை: 168

## சென்னை பல்கலையில் இல. அகதி. கதவடைப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் சென்னைப் பல்கலைக்கழகத்திலும், பல்கலைக் கழகக் கல்லூரிகளிலும் கல்வி பயில்வது தடை செய்யப்பட்டுள்ளது. இந்து பத்திரிகை செய்தி வெளியிடுகையில், பல்கலைக்கழக கல்வி சம்பந்தமான பணிப்பாளர் சபையினர் இந்தஉத்தரவைப் பிறப்பித்துள்ளனர் என்று தெரிவித்தது.

# ஆனையிறவு இராணுவ முகாமின் வடக்கு, கிழக்கிலும் கடும் மோதல்

(இயக்கச்சி)

**ஆனையிறவு முகாமின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில கடும மோதல்கள் நடைபெற்று வருகின்றன. நேற்றுப் பிற்பகல் 1.00 மணியளவில ஆரம்பித்த இந்த மோதல் இச் செய்தி அச்சுக்குப் போகுமவரை தொடர்ந்தும் நடைபெற்றவண்ணமுள்ளது.**

நேற்று முன்தினம் பகல் பூராவும் இடம் பெற்ற கடும் மோதல் நேற்றிரவுடன் சற்று ஓய்ந்திருந்தது. இம்மோதலின் போது வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பகுதியில் கடந்த 14 ஆம் திகதி தரையிறங்கிய இராணுவத்தில் ஒரு பகுதியினர் ஆனையிறவு முகாமிற்குள் சென்றிருந்தனர். இதனைத் தொடர்ந்து மீண்டும் நேற்றுப்பகல் ஒரு மணியளவில் இராணுவம் முன்னேற முற்பட்ட சமயம் மீண்டும் மோதல்கள் ஆரம்பமாயின. இம் மோதல்கள் முகாமின் கிழக்குப் புறத்திலும், கண்டி

(4ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தில் எவரும் வெற்றி பெறுவதில்லை

### - பிரேமதாசா

யுத்தத்தில் எவரும் வெற்றி பெறுவதில்லை. எல்லோரும் தோல்வி அடைகிறார்கள். சமாதானத்திலேயே எல்லோரும் வெற்றி காண்கிறார்கள் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் அறிக்கையொன்றை வெளியிட்ட பிரேமதாசா கலந்தாலோசனை மூலமே மனிதப் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காண முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

## தேவையற்ற உயிரிழப்புக்கள் நாம் சிந்திக்கவேண்டும்

### - சிறில்ரணதுங்க

(கொழும்பு)

நாம் வெற்றியைக் கொண்டாடும் அதேவேளை தேவையற்ற உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளது பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்றும், இந்த உயிரிழப்புகளால் நாட்டில் பெரும் சேதங்களே ஏற்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க கூறியுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்வு கட்சிபிரமுகர்களுடன் பேச்சு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றினை தேர்ந்தெடுப்பது குறித்து சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். மொகமட் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியே சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துகிறார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடபகுதிக்கான பொருள்களுக்கு

## புனர்வாழ்வு அமைச்சே இனி அனுமதி வழங்கும்

(கொழும்பு)

வடக்கிற்கான பொருள் அனுமதிப்பத்திரங்களை புனர்வாழ்வு அமைச்சே வழங்கும் என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

விசேட மாநாட்டில் ஆர். பிரேமதாசா இதனைத் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. வடக்குக்கிழக்கிற்கு எத்தகைய பொருள்களை அனுப்பலாம், எத்தகைய பொருள்களை தடை செய்யலாம் என்பதை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வியாபாரிகள் சிலர் தலைமறைவு

(வவுனியா)

வடக்கிற்குத் தடைசெய்யப்பட்ட பொருள்களை அனுப்பிய குற்றத்தின் பேரில் அனுராதபுரத்தில் இராணுவ அதிகாரிகளையும், சிங்கள வியாபாரிகளையும் கைது செய்ததைத் தொடர்ந்து வவுனியாவில் உள்ள சில மொத்த வியாபாரிகள் தலைமறைவாகியுள்ளனர்.

இந்தத் தடை செய்யப்பட்ட பொருள்கள் வவுனியா வர்த்தகர்களின் லொறிகளிலேயே வடக்கு நோக்கிக் கொண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனி. உணவு விநியோகம் தொடர்ந்தும் இழுபறியில்

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு கிராமப் புற கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு உணவுப் பொருள் அனுப்புவது சம்பந்தமாக வவுனியா கச்சேரி அதிகாரிகளுக்கும், இராணுவ அதிகாரிகளுக்குமிடையே தொடர்ந்தும் இழுபறி நிலை நீடித்து வருகிறது.

மேற்படி பொருள்களை லொறிகள் மூலம் கிராமப்புறப் பகுதிகளுக்கு அனுப்பி வைப்பது சம்பந்தமாக கச்சேரி அதிகாரிகள் தொடர்ந்து இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுவருகின்ற போதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

குறிஞ்சாத்தீவு உப்பள விடுதி

## 27 ஆம் திகதித் தாக்குதலில் வீரமரணமடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமின் குறிஞ்சாத்தீவு உப்பள விடுதிகள் பகுதி மீது சென்ற மாதம் 27ஆம் திகதி அன்று விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலின் போது வீ மரணமடைந்த போராளிகளின் விபரம் வருமாறு:

- ★ சரா (சின்னத்துரை ஜீவராசா - G. P. S. றோட், கல்வியங்காடு)
- ★ குகதாஸ் (இராசரத்தினம் ராசேந்திரன் - உரும்பராய் வடக்கு, உரும்பராய்)
- ★ ரகீம் (ஐசாக்றொனட் வீரபாகு - அளவெட்டிதெற்கு, அளவெட்டி)

(3-ம் ப பா)

## ஹெலித்தாக்கு

(வேலணை)

தீவுப்பகுதியில் ஹெலிக்கப்டரின் நடமாட்டங்கள் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன. வெள்ளியன்று நண்பகலுக்குப் பின்னர் ஊர்காவற்றுறைப் பக்கமாக இருந்து வந்த ஹெலிக்கப்டர் ஒன்று அல்லைப்பிட்டிக்கும் மண்கும்பானுக்கும் இடையே சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை குறிவைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளது. (14)

## இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஏழாலை வடக்கைச் சேர்ந்த எஸ். கருணாகரன் (வயது 16) என்பவர் காயமுற்றநிலையில் நேற்றைறய தினம் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு)

## சுதனுக்கு மக்கள் அஞ்சலி

(வேலணை)

ஆனையிறவு போரில் வீரமரணத்தை தழுவிக்கொண்ட சுதன் இராசரெத்தினம் ஜீவகுமார் புங்குடுதீவு-2) என்பவரின் புகழ் உடல் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தீவகச் செயலகத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து புகழ் உடல் புங்குடுதீவு மகா வித்தியாலயம், வேலணை. துறையூர் ஐயனார் சனசமூக நிலையம் என்பவற்றில் மக்களினது அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின் வேலணை சாட்டி மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (14)

## சீ-நோர் நிறுவன கிளையை வடக்கில் மூடிவிட உத்தரவு

(குருநகர்)

யாழ்ப்பாணத்தில் குருநகரிலும், காரைநகரிலும் சீ-நோர் நிறுவனங்களை மூடுமபடி மீன்பிடி அமைச்சர் பணித்துள்ளார். இதற்கான உத்தரவுகளை மீன்பிடி அமைச்சர் பிறப்பித்துள்ளார் என யாழ். பிரதேச சீ-நோர் பிரதி பொது முகாமையாளர் இந்த வருடம் மார்ச் 28 இல் அறிவித்துள்ளார். இதனால் 210 ஊழியர்கள் தொழிலை இழக்கும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை, இத்தொழிலாளர்களுக்கான சம்பளக் கொடுப்பனவும் சென்ற வருடம் ஆகஸ்ட் வரை வழங்கப்படவில்லை. இலங்கை வர்த்தகஊழியர் சங்கம் (சீ.எம்.யு) மேற்கொண்ட நடவடிக்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

## அங்கீகாரம் கிடைத்தால் பரீட்சை நடத்தப்படும்

### - பரீட்சை ஆணையாளர்

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்புப் படை அனுமதி அளித்தால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பரீட்சை நடத்த தாம் தயார் என பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆதர் வெதமுல்ல அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைகளை நடத்த பாதுகாப்புப் படையினரின் அங்கீகாரம் கிடைத்தால் இந்த மூன்று மாவட்டங்களிலும் எந்தத் தருணத்திலும் பரீட்சை நடத்த பரீட்சைத் திணைக்களம் தயாராக உள்ளது என்றும் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார்.

## கடமைக்குத் திரும்பியும் ஆசிரியர் சம்பளம் இல்லை

(நல்லூர்)

அண்மைய இராணுவ நடவடிக்கை காரணமாக நீண்ட நாட்களாகப் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்காது இருந்து, மீண்டும் கடமைக்குத் திரும்பிய தமிழர் ஆசிரியர்களுக்கு அவர்கள் மீளவும் கடமையேற்ற நாளிலிருந்து சம்பளக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இவர்களுக்கு சம்பளக் கொடுப்பனவைவழங்க யாழ் பிரதேசகல்வித் திணைக்களமோ மற்றும் கோட்டக் கல்வி அலுவலகங்களோ இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

## மரத்தளபாட விற்பனை

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

20 வீத கழிவு விலையில் தளபாட விற்பனை நடைபெறும்.

அனைவரையும் அழைக்கின்றோம்.

(B-2908)


இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

## யாழ்ப்பாணக் கிளை

**நீர்வேலி தெற்குக்கான ஆரம்ப சுகாதார கவனிப்பு அமைப்பாளர்கள்**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில், சுகாதாரம், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்ற ஆரம்ப சுகாதார கவனிப்பு முதலுதவி பயிற்சி சுகாதா ரத்தில் போதிய பயிற்சி போன்றவற்றில் அனுபவ முடைய, 25 வயதுக்கு மேற்பட்ட, மேற்குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங் கப்படும். தகைமையுடையோர் 16-08-91க்கு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பித்தவர்களுக்கான நேர் முகப் பரீட்சை 19 - 08 - 91 முற்பகல் 9-00 மணிக்கு கோப்பாய் சுகாதார சேவை அதிகாரி பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(B-2905)

ச சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
இ.செ.சங்கம் (யாழ்கிளை)

## 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**திருமதி சிவானந்தன் சந்தானமலர்**
(சாந்தி)

'வேங்கைகளின் விழுதாய் நின்ற'
என் அன்புத் தங்கை சாந்தியே
நீ வெந்தணலில் கரைந்தாலும்
உன் வேட்கையை வேங்கைகள்
நிறை வேற்றியே வைப்பார்கள்
அதுவே உன் ஆன்ம சாந்தி


ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்புள்ள
அண்ணா, அண்ணி, மருமக்கள்.

சகோதரன்
Dr V. P. சுந்தரராஜன்
சாயி மருத்துவக் கல்லூரி,
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்நகர்.

(B /2888)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
16 - 10 - 1964

வீரமரணம்
05 - 08 - 1990

**கப்டன் யசோதரன்**
(மணியம் கிருஷ்ணதாஸ்)

கோட்டைக்குள்ளே குடியிருந்து
கொட்ட மடித்தவர்கள்
கோட்டை விட்டுப் போகவென்றே
கொட்டிய செங்குருதி
பட்டொளி வீசிடும் புலிக்கொடியாகி
கோட்டை வாசலில் அசைந்து
மீட்டுகிறது உன் நினைவை
மீண்டும் நீ வாராயோ?

பம்பைமடு,
வவுனியா.

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(B/ 2904)

## மத்திய அமைச்சர்களுக்கு கறுப்புக் கொடி

(சென்னை)

காவிரி நடுவர்மன்ற இடைக் கால உத்தரவைச் செயற்படுத் தும்படி மத்தியஅரசு கர்நாடக அரசுக்கு நெருக்குதல் கொடு க்க வேண்டும். அப்படிச்செய் யத் தவறும் பட்சத்தில் தமிழ் நாட்டுக்கு வருகை தரும் மத் திய அமைச்சர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் களுக்கும் எதிராகக் கறுப்புக் கொடி காட்டி, ஆர்ப்பாட் டங்களை நடாத்தப் போவ தாகத் தமிழக விவசாயிகள் சங்கம் தெரிவித்திருக்கிறது.

## அகதிகள் தங்குவதற்கு முகாம்கள் தயார் நிலையில்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து வரும் தமிழ் அகதிகள் தங்குவதற்கு மன்னாரில் அகதி முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட் டுள்ளது என்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது

தமிழகத்தில்இருக்கும் இலங் கைத் தமிழர்கள் இலங் கைக்கு திரும்பி வந்தால் அவர் களை தற்காலிக முகாம்களில் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், இதற்கென பேசாலையிலும், தாழ்வுக்காட்டிலும் உள்ள முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு அமைச்சு அறி வித்துள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்:
14
12
1973



வீரமரணம்:
05
08
1990

**2ஆம் லெப்டினனட் சரத்பாபு**
**(கந்தசாமி அகிலேஸ்வரன்)**

கல்வியின் நோக்கு எதுவென்று புரிந்து கொண்டு
கடமை செய்யப் புறப்பட்ட விறல் வேங்கையே!
வெல்வது உறுதி தமிழீழம் காண்பது இறுதி என்ற
வேங்கைகள் கொள்கைவழி வீரமுடன் நீ நடந்தாய்!

மாவீரர் குருதி நனைந்து கோட்டையிலே பறக்கின்ற
மகோன்னத கொடியில் உன் உதிரமும் கலந்துள்ளது
உண்மையை உணர்ந்து உள்ளம் சிலிர்க்கின்றோம்
உறுதியுடன் உன்பாதை வழிநாம் நடக்கின்றோம்!

**05. 08. 1990 அன்று கோட்டையில் இவருடன் வீரமரணமடைந்த சக போராளிகளுக்கும் எம் வீர அஞ்சலியை தெரிவிக்கின்றோம்.**

அகிலேஸ்வரன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, தம்பி, மற்றும்
உறவினர்கள், நண்பர்கள்.

(B/2903)



இன்று
நண்பகல் 12-00 மணிக்கு
மங்களகரமான
## திறப்பு விழா

ஆண்களுக்கான சகலவித ஆடைகளும்
உரிய நேரத்தில் தைத்துக் கொடுக்கப்படும்.

# அழகியல் தையல் நிலையம்

73, பெரியகடை, (B-2907) யாழ்ப்பாணம்.


## 1ஆம் ஆண்டு நினைவுகூரல்



மலர்வு:
09 - 01 - 1970

உதிர்வு:
05 - 08 - 1990

**கப்டன் ஜொனி**
**(செல்வன் தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்**
**முன்னாள் யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளர்)**

"இன்று ஓராமாண்டாம் எமது செல்வத்தை மறப்போமா உயிருள்ளவரை"
(இவருடன் கோட்டையில் வீரமரணமெய்திய அனைத்துப் போராளிகளையும் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்)

குறிப்பு:- 25 - 07 - 91 இல் அன்னாரது இல்லத்தில் நிகழ்ந்த ஓராண்டுத் திதியில் (ஆண்டுத் திவசத்தில்) கலந்து கொண்ட அன்னாரது இயக்க நண்பர் களுக்கும்; உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகள்.

பலாலி வீதி,
திருநெல்வேலி.

– குடும்பத்தினர்.

(B/ 2906)

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 05-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05


### சிந்தனைக்கு

கருத்துக்கள் மோதும் போதெல்லாம்
சுதந்திரம் ஒலிக்கிறது.
— ஆட்லாய் ஸ்டீவன்ஸன்

# தேசத்துரோகத்திற்கு புதிய விளக்கம்

தடை செய்யப்பட்ட பொருள்களை வட பகுதிக்கு அனுப்புவதற்கு உடந்தையாக இருந்து நாட்டிற்குத் துரோகம் செய்தவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடப் போவதாகச் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார். கடந்தவாரம் சில இராணுவ அதிகாரிகள் உட்பட சிங்கள வியாபாரிகள் சிலர் வடபகுதிக்கு லஞ்சம் பெற்றுக் கொண்டு தடை செய்யப்பட்ட பொருள்களை அனுப்ப உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் சிறிலங்கா விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.

இலங்கை பல இன மக்கள் வாழும் ஒரு தீவு. ஆனால் பெரும்பான்மை சிங்கள ஆட்சியாளர்களாலும் மகா சங்கத்தினராலும் வளர்த்தெடுக்கப்பட்ட இனவாதம் இலங்கை முழுதும் சிங்களவருக்கே என்ற பேரினவாதச் சிந்தனையை வளர்த்துவிட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கைத் தீவில் சிறுபான்மையிருக்கு பலமான அடக்கு முறைகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. இலங்கையில் உள்ள தேசிய சிறுபான்மை இனங்களும் இத்தீர்வுக்குரியவர்கள் என்பதை பெரும்பான்மை இன மக்களால் ஏற்க முடியவில்லை.

இந்நிலைமை சாதாரண சிங்கள குடி மகனில் இருந்து அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதி வரை காணப்படுகின்றது. இதன் வெளிப்பாடே வட பகுதிக்குப் பொருள்கள் செல்வதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது சுமத்தப்பட்ட தேசத் துரோகக் குற்றச்சாட்டு.

இதன் மூலம் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இலங்கைத் தீவில் இரு நாடுகள் இருப்பதை ஏற்றுள்ளதாகத் தெரிகின்றது. ஏனெனில் இலங்கை ஒரு நாடாக இருப்பின் வடபகுதிக்கு பொருள்கள் அனுப்பியதற்கு அதிகாரிகள் பெற்றது லஞ்சமே ஒழிய காட்டிக் கொடுப்பல்ல. இதனால் இது லஞ்சக் குற்றச்சாட்டே ஒழிய தேசத் துரோகக் குற்றச்சாட்டு அல்ல.

பொதுவாக தேசத் துரோகக் குற்றச்சாட்டுகள் என்னும் போது ஒரு நாட்டின் இரகசியங்கள் இன்னொரு நாட்டிற்கு கடத்துதல், விற்றல் என்பனவையே கருதப்படுகின்றது. இராணுவ இரகசியங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப இரகசியங்கள் நாட்டின் முக்கிய நிலைகள் பற்றிய தகவல்கள் போன்றவற்றினை வேற்று நாட்டிற்குக் கொடுத்தல், வேற்று நாட்டிற்காக உள்நாட்டில் வேவு பார்த்தல் என்பவையே அநேகமாக தேசத் துரோகக் குற்றமாகக் கருதப்படுகின்றன.

ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி இலங்கைத்தீவு முழுவதும் ஒற்றையாட்சி அமைப்பைக் கொண்ட ஒரு நாடு எனக் கூறிக்கொண்டு இத் தீவின் ஒரு பகுதிக்குப் பொருள்கள் கொண்டு செல்வதற்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் அவர்களைத் தேசத் துரோகிகள் என்கின்றார். அவ்வாறானால் வடக்கை அவர் வேறொரு நாடு என்றே கருதுகின்றார் என்பதே உண்மை,

ஆனால், பேரினவாதிகளின் பார்வையில் லஞ்சம் வேண்டிக்கொண்டு உதவியவர்கள் தேசத்துரோகிகள் என்பதைவிட இனத் துரோகிகள் என்பதே முனைப்பான பிரச்சினையாகும்.

சிறிலங்கா ஜனாதிபதியும் தேசத் துரோகிகள் எனக் குறிப்பிடாமல் இனத் துரோகி என்றே குறிப்பிட்டிருப்பார். ஆனால், பல் தேசிய இனங்கள் வாழும் 'நாட்டில்' ஜனாதிபதியாக இருந்துகொண்டு எவ்வாறு இனவாதியாக தன்னைக் காட்டிக் கொள்ள முடியும்.

ஆனால், சிறிலங்கா ஜனாதிபதியின் தேசத் துரோகக் குற்றச்சாட்டும் பொருத்தப்பாடு உடையதே. இதன் மூலம் அவரது மனதில் உள்ளது வெளிப்பட்டது. இலங்கை இரு சுதந்திர நாடுகளைக் கொண்ட ஒரு தீவு என அவர் மனதில் படிமானம் ஏற்பட்டு விட்டது. ஆகையினால் இவ்விடயமும் தமிழ் மக்களைப் பொறுத்து சந்தோஷம் அளிக்கும் விடயமேயாகும்.

நடுவர் மன்றத் தீர்ப்பை

# கொள்கையளவில் ஏற்றாலே பேச்சு நடத்தலாம்

## - வாழப்பாடி

(சென்னை)

காவிரி நடுவர் நீதிமன்றம் தமிழ்நாட்டுக்கு நீரை வழங்கும்படி விடுத்த தீர்ப்பைக் கர்நாடகம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட பிறகுதான் அதை எப்படி நிறைவேற்றலாம் என்பது பற்றிப் பேச்சு நடத்தலாம் என தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரும் முன்னாள் தொழிலாளர் நலத்துறை அமைச்சருமான வாழப்பாடி கே. ராமமூர்த்தி கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில் செய்தியாளரிடம் பேசிய அவர் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு நடந்துகொண்ட விதம் தவறானது என்று வலியுறுத்தினார். அதே சமயம் மத்திய அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தும் எதையும் காங்கிரஸ்காரரான தான் செய்யப் போவதில்லை என்றும் தெரிவித்தார்;

இதற்கிடையே மத்திய வர்த்தகத் துறை இணை அமைச்சரும் காங்கிரஸ் பிரமுகருமான ப சிதம்பரம் புதுடில்லியில் காவிரி நீர்ப் பிரச்சினை பற்றிப் பேச பிரதமமந்திரியைச் சந்திக்க இருமுறை சென்றார். அந்தச் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் பிரதமரைத் தான் சந்திக்க முடியவில்லை என்று தெரிவித்தார்.

# போர்க்காலச் சேவையில் ஈடுபட்ட ஸ்தாபனங்கள்

(நமது நிருபர்)

ஆனையிறவு முகாம் போர்ச் சேவையில் பளைக்குச் சென்று சேவையாற்றிய ஸ்தாபனங்களின் விபரப் பட்டியல்களை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வெளியிட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:

### யாழ். வட்டவைப் பகுதி

யாழ். வட்டவைப் பகுதி, பொம்மைவெளி சிற்றூரவை, வடபிரதேச வர். ஊழியர் சங்கம், யாழ். மத்தி சிற்றூரவை, சாமி மருத்துவப்பயிற்சி தாதி. கொட்டடி சிற்றூரவை, குருநகர் மேற்கு சிற்றூரவை, குருநகர் கிழக்கு சிற்றூரவை, பாசையூர் சிற்றூரவை, நாவாந்துறை சிற்றூரவை, யாழ். மத்தி, நகை வர். சங்கம், யாழ். பாரதி சன. ச. நி. குருநகர், ஆய்வு நிறுவனம், கொழும்புத்துறை சிற்றூரவை, சுண்டுக்குளி சிற்றூரவை, அறிவொளி ச. ச. நி. ஆனைக்கோட்டை. ஈச்சமோட்டை ச.ச.நி, எழிலூர் விளையா. கழகம், யாழ். வைத்தீஸ்வராலயம்.

### நல்லூர் வட்டவைப் பகுதி

நல்லூர் வட்டவை, காளி கோவிலடி ச. ச. நி திருநெல்வேலி, அரியாலை மத்தி சிற்றூரவை, அரியாலை பிரதேச காரியாலயம்.

### தெல்லிப்பளை வட்டவைப் பகுதி

தெல்லிப்பளை வட்டவை, அளவெட்டி சிற்றூரவை.

(தொடரும்)

---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ காண்டீபன் (சுகந்தினி வேலாயுதம்) கண்டாவளை, கிளிநொச்சி
★ சுகந்தினி (யோகா கணபதிப்பிள்ளை) செக்கட்டிப்புலவு, பம்பைமடு, வவுனியா
★ வாணன் (நடேஸ் ஜெயக்குமார்) சமாதியடி, உரும்பராய் வடக்கு, உரும்பராய்
★ வர்மன் (பாஸ்கரமூர்த்தி சுந்தரமூர்த்தி) பேச்சியம்மன் கோயிலடி, வாழைச்சேனை
★ சபா (மாரிமுத்து பத்மநாதன்) C. R. R. பாம், பள்ளக்கால், குண்டகசாலை
★ மயில்வாகனம் (சின்னத்தம்பி சுந்தரலிங்கம்) பழையதோட்டம், வல்வெட்டித்துறை
★ ஜெயந்திரன் (கந்தப்பர் தவராசா) குருமண்வெளி, களுவாஞ்சிக்குடி, மட்டுநகர்
★ பாரதி (நவரட்ணம் கோபாலபிள்ளை) செட்டிபாளையம், மட்டுநகர்
★ நளினன் (நாகராசா சிவக்குமார்) ஆறுமுகத்தான் குடியிருப்பு, தண்ணாமுனை, மட்டுநகர்
★ வரதன் (மாசிலாமணி மகேந்திரன்) பதுளை றோட், பெரியபுல்லுமலை ஏற்றம், மட்டக்களப்பு
★ ஆனந்தபாபு (தங்கராசா நடராசா) 120, 3ஆம் குறிச்சி, 7 ஆம் வட்டாரம், துறைநீலாவணை, மட்டுநகர்
★ நிதி (செல்வநைனார் சுந்தரராஜன்) 6ஆம் வட்டாரம், கும்புறுப்பிட்டி, திருமலை
★ புருஷ்லி (சீவரட்ணம் சின்னவன்) சித்தாண்டி, தாளையடி றோட், மட்டக்களப்பு
★ கரன் (வேலாயுதம் சிவனையா) கங்குவேலி, தெகிவத்தை, திருமலை
★ மதனா (சிவமலர் தளையசிங்கம் நுணாவில், சாவகச்சேரி)
★ கார்த்திகா (ரமணி ராசரட்ணம் - இல. 16, சென் மேரிஸ் வீதி, நாவாந்துறை வடக்கு)
★ பிரதீபா (ஜெயந்தி பெரியதம்பி - புதுக்குடியிருப்பு, முல்லை)
★ மெடோனா (செல்வராணி மாயழகன் - பல்பமாயன் கபே, பூநகரி)
★ அன்பினி (விஜிதா சிவனடி - மண்டான், கரணவாய்)
★ வதனி (கென்சி பத்திநாதன் - மன்னார்)
★ சிசியா (ரஞ்சினி நடராசா - தொல்புரம் மத்தி, சுழிபுரம்)
★ தங்கமணி (புஸ்பலதா நடராசா - பொத்தனை, கரவெட்டி கிழக்கு)
★ யசீர்மா (சிவலோசினி சிவானந்தம் ஐயர் - அல்வாய் மேற்கு, திக்கம்)
★ பட்ரியா (வரலக்ஷ்மி தேவசிங்கம் - சடையாண்டி ஒழுங்கை, வல்வெட்டித்துறை)
★ நெல்சா (சரோஜாதேவிசின்னக்குட்டி-கச்சாய் தெற்கு, கொடிகாமம்)
★ யாழ்மொழி (விஜயலதா பாக்கியநாதன்-போயிட்டி இளவாலை)
★ சுனித்தா (உஷா கருணாகரன் - குச்சவெளி, திருமலை)
★ ஜஸ்மின் (செல்வமலர் கோபால் - 5ஆம்வாய்க்கால், பன்குளம், திருமலை)
★ சுந்தரி (சுஜிதா தேவநாயகம் - 2ஆம் வட்டாரம், நிலாவெளி, திருமலை)
★ இளவரசி (சந்திரபவானி சிவப்பிரகாசம் - கொக்குத்தொடுவாய்)
★ குட்டி (செபஸ்ரியம்மா அலோசியஸ் - 6ஆம் வட்டாரம், வங்காலை, மன்னார்)
★ காயத்திரி (உமாதேவி சந்திரசேகரம் - றெட்பானா விசுவமடு, முல்லைத்தீவு)
★ நிசா (சுமதி சதாசிவம் - 1ஆம் குறிச்சி, தம்புலுவில், அம்பாறை)
★ கீர்த்தி (வீரப்பாபிள்ளை கணேஸ்வரன் - வரணி வடக்கு, வரணி)
★ திசைவீரன் (சற்குருநாதன் சற்குணபேசன் - கச்சாய் வீதி, கொடிகாமம்)
★ சரத்பாபு
★ அல்பேட் (கந்தசாமி வன்னியசிங்கம் - மட்டுவில் வடக்கு, மட்டுவில்)
★ சகீம் (ரகீம்) (நாகலிங்கம் ஜெகதாஸ் - உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
★ சிவம் [பவான்] (திருப்பரங்கதிர்நாதன் நெல்லைநாதன் இமையாணன், உடுப்பிட்டி)
★ உமாசங்கர் [ரவி] (சின்னமணி சென்சியஸ் 8/3 ரெக்கிளமேசன், குருநகர்)
★ திகில் (தங்கையா சேரன் D-7 கிளிநொச்சி)
★ நிமலேந்திரன் [பிரசன்னா] (தங்கவேல் செந்தில்குமரன், நடராசாவீதி, வல்வெட்டித்துறை)
★ கந்தன் (டானியல் ராஜ்குமார் கற்கோட்டை, அல்வாய் வடக்கு)
★ வேலுப்பிள்ளை (யூனியன் கந்தையா கந்தசாமி சாவகச்சேரி)
★ சத்தியகுமார் (பொன்னையா சிவனேசராசா திருப்பழுகாமம், மட்டக்களப்பு)
★ கிர்மானி (ஜோன் எட்வேட் கெனடி 3A/1 மவுண்காமல் வீதி, குருநகர்)
★ பவா (கதிரித்தம்பி கணேசலிங்கம் நல்லூர், பூநகரி)
★ அன்பு (பாலச்சந்திரன் ரமணன் தும்பளை, அரசடி லேன், பருத்தித்துறை)
★ அல்பேட் (நடராசா கலைச்செல்வம் கலைவாணி வீதி, தையிட்டி காங்கேசன்துறை-பலாலி)
★ பீலிக்ஸ் (அருளானந்தம் றெனால்டானத் கொண்சுவாசா, தொட்பாவை கோபாலபுரம்)
★ சத்தியராச் (கந்தையா சத்தியசீலன் நிலாவெளி திருமலை)
★ சொனி (சிவஞானசுந்தரம் அசோகன் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி)
★ வினோத் (தர்மலிங்கம் தயாளன் ஆண்டித்தோட்டம், அல்வாய்)
★ ராஜன் (குமாரசாமி குணராசா கேணியடி, கொக்குவில் மேற்கு)
★ மொராஜி (அரசரட்ணம் அரவிந்தன் சேனையூர், கட்டைபறிச்சான், மூதூர்)
★ சுஜன் (கோபாலபிள்ளை புஷ்பராசா ஈச்சிலம்பத்தை 52 ஆம் கட்டை, மூதூர், ஆலங்கேணி)
★ நிருபன் (வேலாயுதம் பாலச்சந்திரன் 1 ஆம் வாட் கிண்ணியா)
★ கேசியன் (பரஞ்சோதிநாதன் நியூட்டன் பிரான்சிஸ் சென் அன்ரனிலேன், பண்டத்தரிப்பு)
★ பிருந்தன் சின்னராசா ஜெராட்திலகர் நானாட்டான், பள்ளங்கோட்டை, மன்னார்)
★ ஆனந்தன் (கந்தசாமித்துரை ராஜவேல், வேம்படி வல்வெட்டித்துறை)
★ கில்பேட் (ஞானராசா ஞானதீபன் கில்லியடி, இலுப்பக்கடவை, மன்னார்)
★ நிதி (இரத்தினம் இலங்கேஸ்வரன் (பாபு) - கச்சாய், கொடிகாமம்)

# மூழ்கும் கப்பலில் இருந்து ஹெலிமூலம் பயணிகள் மீட்பு

(டர்பன்)

ஆபிரிக்கக் கிழக்குக் கரையில் நீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் கிரேக்க நாட்டுக் கப்பலில் உள்ள பயணிகளை மீட்டெடுக்கும் பணியில் பெரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

600 பயணிகளுடன் அந்தக் கப்பல் தென் அபிரிக்காவில் டர்பனில் இருந்து கிழக்கு லண்டன் துறைமுகம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது அதன் இயந்திர அறைமுழுவதும் நீர் புகுந்து விட்டது. சில பயணிகளும் கப்பல் ஊழியர்களும் மிதக்கும் சாதனம் மூலம் தப்பியுள்ளனர். பின்னர் சரக்குக் கப்பல்கள் மற்றும் மீன்பிடிப் படகுகளினால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

பாதியளவுமூழ்கியபடிஉள்ள கப்பலில் இருந்து மற்றவர்கள் உலங்கு வானூர்திகள் மூலம் மீட்கப்படுகின்றனர். செய்தி அச்சுக்குப் போகும் வரை மீட்புப் பணி தொடர்கிறது.

# ஜெருசலேம் உரிமையை கைவிடப் போவதில்லை
## - இஸ்ரேல் அறிவிப்பு

(டெல் அவிவ்)

மத்திய கிழக்கு சமாதான மாநாட்டில் பூரண ஜெருசலேம் நகருக்கான தனது கோரிக்கையை கைவிடப்போவதில்லை என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது நேற்று இஸ்ரேலிய அமைச்சரவை கூடுவதற்கு முன்பு இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. சமாதான மாநாட்டில் நிபந்தனையோடு பங்கு கொள்ளும் இஸ்ரேலியப் பிரதமரின் நிலையை அமைச்சரவை ஏற்றுக் கொள்ளும் என எதிர் பார்க்கப்பட்டது.

# தமிழகத்தில் மேலும் 5 கடற்படைப் பிரிவுகள்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழகத்திற்குள் வராமல் தடுப்பதற்காக மேலும் ஐந்து கடற்படைப்பிரிவுகள்தமிழகத்தின்கரையில்ஏற்படுத்தப்படுமென மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய கடற்படைப் பிரிவுகள் தொண்டி, ஜகதாப் பட்டினம், மல்லிப் ட்டினம், கோடிக்கரை மற்றும் தோப் புத்துறை ஆகிய ஊர்களில் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்போது நாகைப்பட்டினத்திலும், இராமேஸ்வரத்திலுமுள்ள கடற்படைப் பிரிவுகள் பிரதேச தலைமையகங்களாக உயர்த்தப்படும் என்றும் சரத்பவார் குறிப்பிட்டார்.

# ரயில் விபத்தில் 9 பேர் மரணம்

(லக்னோ)

இந்தியாவில் நேற்றுக் காலை கான்பூர் அருகில் நடந்த ரயில் விபத்தொன்றில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். 34 பேர் காயமுற்றனர் 6 பேரின் நிலை கவலைக்கிடமாயுள்ளது.

குவாலியூர் கடுகதி புகையிரதம் தரித்து நி ற விசேட இராணுவ புகையிரதத்துடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

பாக்.பஞ்சாப் மாநிலத்தில்

# தேர்தல் முறைகேடு; ஆலோசகர் ஒப்புதல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பஞ்சாப் முதலமைச்சரின் முன்னாள் அரசியல் ஆலோசகர் நவீப் மல்லீக் பொதுத்தேர்தல் முறைகேடுகளில் தான் உடந்தையாக இருந்ததாகப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்

திருமதி பெனாஸீர்பூட்டோவின் கட்சி பெரும்பாலான இடங்களில் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றதாக உளவிலாகா அறிக்கைகள் குறிப்பிட்டதும், தேசிய சபையில் குறைந்தது 42 தொகுதிகளுக்கு வெளிப்படையாக முறைகேடுகள் நடந்ததாக இஸ்லாமாபாத்தில் பத்திரிகையாளர் கூட்டத்தில் மல்லீக் கூறினார்.

இதனிடையே பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் ஜனநாயக முன்னணிக் கூட்டணித் தலைவர்கள் நவாப் ஷெரீப் அரசின்எதேச்சதிகாரக்கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று நாடு தழுவிய 12மணிநேர உண்ணாவிரதத்தை அனுஷ்டித்தார்.

---

தேவையற்ற

எண்ணூறு படையினரை மீட்க எண்ணாயிரம் படையினரை அனுப்பி வைத்ததாக பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

---

இல ப்பிரச்சினை

என தெரி க்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெறாத அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையே அவர் இவ்வாறு சந்தித்துப் பேசுகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமுகம்தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பரியோவான் கல்லூரியில் கல்வி பயிலும் ஆண்டு 10 இற்கு மேற்பட்ட சகல மாணவர்களையும் இன்று திங்கட்கிழமை 10 30 மணிக்கு கல்லூரியில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்,

# ‥ணத்துடன் சென்ற குடும்பஸ்தரை காணவில்லை

(வவுனியா)

பெருந்தொகை பணத்துடன் வவுனியா நகரை நோக்கிச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர்காணாமல்போய் விட்டார்

சில தினங்களுக்கு முன்னர் நெளுக்குளம் - கூமாங்குளம் குறுக்குப் பாதை வழியாக நகரப்பகுதி நோக்கிச் சென்றவரேகாணாமல்போயுள்ளார்.

ஐயம்பிள்ளை எமல்பற்றிக் (வயது 35) என்பவர் தரணிக்குளம் பகுதியிலிருந்து அத்தியாவசிய பொருள்கள் பெற்று வரும் நோக்குடன் வவுனியா நகரை நோக்கிச் சென்றார் என்றும் இவர் காணாமல் போனதையிட்டு இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். (தி)

# ராஜீவ் கொலையை ஆராய 2 ஆவது ஆணைக்குழு

(புதுடில்லி)

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக ஆராய இரண்டாவது ஆணைக்குழு ஒன்றை இந்திய மத்திய அரசு நியமிப்பது என்று முடிவு செய்துள்ளதாக பி.ரி.ஐ. தெரிவித்து உள்ளது. இச் செய்தியில் மேலும் தற்போதைய ஆணைக்குழு தனது நடவடிக்கைகளை விரிவு படுத்துவதை மறுத்து விட்டிருப்பதையடுத்தே இம் முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும், கொலை நடந்த இடத்திலிருந்த பாதுகாப்பு சம்பந்தமான தவறுகளை மட்டுமே விசாரிக்க முடியுமென தற்போதைய ஆணைக்குழுவின் அதிகாரிகள் கூறியுள்ளனர் என்றும், புதிதாக நியமிக்கப்படும் ஆணைக்குழு கொலை சம்பந்தமான சகல விடயங்களையும் ஆராயும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராஜீவ் கொலை குறித்து முன்னுக்கு பின் முரண்

ராஜீவ் காந்தி படுகொலையில் வெளிச் சக்திகள் ஈடுபட்டிருப்பது பற்றி மத்திய உள்துறை அமைச்சரும், மத்திய வெளியுறவு அமைச்சரும் முன்னுக்குப்பின் முரணான கருத்து வெளியிட்டுள்ளார்கள் என்று பாரதீய ஜனதாக் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

பாரதீய ஜனதா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் ''ராஜ்ய சபாவில் பேசிய உள்துறை அமைச்சர் மகாவல்லரசு ஒன்று ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று கூறியுள்ள வேளையில் வெளியுறவு அமைச்சரோ புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதால் இந்த நேரத்தில் எந்த ஒரு முடிவுக்கும் வருவது பக்குவமற்றது எனக் கூறியிருப்பதாக'' குறிப்பிட்டுள்ளது

# குடும்பஸ்தர் தற்கொலை

(புங்குடுதீவு)

வாழ்க்கையில் விரக்தியுற்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கி தன் உயிரை மாய்த்துள்ளார். இச்சம்பவம் புங்குடுதீவுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐ திருநாவுக்கரசு (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரை மாய்த்துக்கொண்டவர் ஆவார். ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை காலை தனது வீட்டிற்கு அருகில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். (22)

# பெருமளவில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட வீர வேங்கைகளான பிரதீப் (நாகமூர்த்தி செல்வராசா, கப்பல் புலம், புன்னாலைக்கட்டுவன் அருண் (கோவிந்தசாமி அருளானந்தம், மாதகல்), கென்றி (சின்னராசா சிறீரங்கன், கும்புறுப்பிட்டி) ஆகியோரின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக மாதகல் புனித சூசையப்பர் மகா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டன. பெருமளவு மக்கள் கலந்து கொண்டு மாவீரர்களுக்குத் தமது அஞ்சலியைச் செலுத்தினர்

இங்கு நடைபெற்றஅஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா மற்றும் குகதாஸ் மாஸ்ரர் ஆகியோர் உரையாற்றினர். பின்னர் இப்புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின.

---

ஆனையிறவு

வீதியில் குறிஞ்சாத்தீவை அண்டிய பகுதியிலும் இடம் பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் கொம்படிப் பாதையை அண்டிய பகுதியிலும் நேற்று மாலை மோதல்கள் ஆரம்பித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை சிறிலங்கா

---

சீ-நோர்

யினால் சீ-நோர் ஊழியருக்குத் தலா ரூபா 3,000 மார்ச் 7ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. நிலுவையாக உள்ள சம்பளக் கொடுப்பனவு இது வரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புக்குச் சென்றுவர முடியாத காரணத்தால் நிலுவைச் சம்பளத்தை வழங்க முடியவில்லை என்று பிரதிப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

சீமெந்து, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனங்களின்

கடற்படைப்பிரிவுகள்தமிழகத் தின்க ற்கரையில்ஏற்படுத்தப் படுமென மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய கடற்படைப் பிரிவுகள் தொண்டி, ஜகதாப் பட்டினம், மல்லிப் ட்டினம், கோடிக்கரை மற்றும் தோப் புத்துறை ஆகிய ஊர்களில் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்போது நாகை ட்டினத்

## ரயில் விபத்தில் 9 பேர் மரணம்

(லக்னோ)

இந்தியாவில் நேற்றுக் காலை கான்பூர் அருகில் நடந்த ரயில் விபத்தொன்றில் ஒன் பது பேர் கொல்லப்பட்டனர். 34 பேர் காயமுற்றனர் 6 பேரின் நிலை கவலைக்கிட மாயுள்ளது.

குவாலியூர் கடுகதி் புகை யிரதம் தரித்து நி ற விசேட இராணுவ புகையிரதத்து ன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

பவார் குறிப்பிட்டார்.

பாக்.பஞ்சாப் மாநிலத்தில்

# தேர்தல் முறைகேடு; ஆலோசகர் ஒப்புதல்

(இஸ்லாமாபாத்)

ப கிஸ்தானில் பஞ்சாப் முத லமைச்சரின் முன்னாள் அர சியல் ஆலோசகர் நவீப் மல் லீக் பொதுத் தேர்தல் முறை

### தேவையற்ற

எண்ணூறு படையினரை மீட்க எண்ணாயிரம் படை யினரை அனுப்பி வைத்ததாக பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளி யிட்டிருக்கின்றன.

### இப்பிரச்சினை

என தெரி க்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் அங்கத் துவம் பெறாத அரசியல் கட்சி களின் பிரதிநிதிகளையே அவர் இவ்வாறு சந்தித்துப் பேசுகின்றார் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

டுள்ள அறிக்கையொன்றில் ''ராஜ்ய சபாவில் பேசிய உள் துறை அமைச்சர் மகாவல்ல

சேடுகளில் தான் உடந்தை யாக இருந்ததாகப் பகிரங்க மாக ஒப்புக்கொண்டுள்ளார்

திருமதி பெனாஸீர்பூட்டோ வின் கட்சி பெரும்பாலான இடங்களில் பொதுத்தேர்த லில் வெற்றி பெற்றதாக உள விலாகா அறிக்கைகள் குறிப் பிட்டதும், தேசிய சபையில் குறைந்தது 42 தொகுதிகளு க்கு வெளிப்படையாக முறை கேடுகள் நடந்ததாக இஸ்லா மாபாத்தில் பத்திரிகையாளர் கூட்டத்தில் மல்லீக் கூறினார்.

இதனிடையே பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனா ஸீர் பூட்டோ தலைமை யிலான பாகிஸ்தான் ஜன நாயக முன்னணிக் கூட்டணித் தலைவர்கள் நவாப் ஷெரீப் அரசின்எதாச்சதிகாரக்கொள் கைகளுக்கு எதிர்ப்புத் தெரி விக்கும் வகையில் நேற்று நாடு தழுவிய 12மணிநேர உண்ணா விரதத்தை அனுஷ்டித்தார்.

### வவுனி. உணவு

லும் கடந்த வருடம் அக்டோ பர், நவம்பர் மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்பட வேண் டிய நிவாரண உணவுப் பொருள்கள் இன்னமும் பல கூட்டுறவுக் கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

இதன் காரணமாக வவு னியா தெற்கு தமிழ்ப் பிரிவு கிராமப்புறங்களில் வாழும் தமிழ்ப் பொதுமக்கள் பெரி தும் பாதிப்படைந்துள்ளனர். (தி)

### புனர்வாழ்வு

திட்டவட்டமாக தீர்மானித்து பகிரங்கப் டுத்த வேண்டும் என்றும் வடக்குக் கிழக்கிற்கு கண்டபடி பொருள்களை அனுப்புவதற்கு அனுமதிவழங் கக் கூடாது எனவும், புனர் வாழ்வு புனர் நிர்மாண அமை ச்சே இனிமேல் அனுமதிப் பத் திரம் வழங்க வேண்டும் என வும் பிரேமதாசா அறிவித் துள்ளார்.

வட-கிழக்குக்கு அனுப்பப் பட்ட பெரும்பாலான பொரு ள்கள் எமக்கு எதிரானவர்களி டமே போய்ச் சேர்ந்துள்ளது என்றும், அதனைநீடிக்கவிடக் கூடாது என்றும் பிரேமதாசா தெரிவித்துள்ளார் என்றும் அப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

# பெருமளவில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணத் தைத் தழுவிக்கொண்ட வீர வேங்கைகளான பிரதீப் (நாக மூர்த்தி செல்வராசா, கப்பல் புலம், புன்னாலைக்கட்டுவன் அருண் (கோவிந்தசாமி அரு ளானந்தம், மாதகல்), கென்றி (சின்னராசா சிறீரங்கன், கும் புறுப்பிட்டி) ஆகியோரின் புக ழுடல்கள் மக்கள் அஞ்சலிக் காக மாதகல் புனித சூசையப் பர் மகா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டன. பெருமளவு மக்கள் கலந்து கொண்டு

மாவீரர்களுக்குத் தமது அஞ் சலியைச் செலுத்தினர்

இங்கு நடைபெற்றஅஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலி களின் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா மற்றும் குக தாஸ் மாஸ்ரர் ஆகியோர் உரையாற்றினர். பின்னர் இப்புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின.

### ஆனையிறவு

வீதியில் குறிஞ்சாத்தீவை அண்டிய பகுதியிலும் இடம் பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் கொம்படிப் பாதையை அண்டிய பகுதியி லும் நேற்று மாலை மோதல் கள் ஆரம்பித்ததாகச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் பலமான குண்டு வீச்சுத்தாக்கு தலை தொடர்ந்தும் மேற் கொண்ட வண்ணமுள்ளன.

இம் மோதல்களில் இராணு வத் தரப்பில் பலர் கொல்லப் பட்டும் படுகாயமடைந்துள்ள தாகவும் தெரிய வருகின்றது. புலிகள் தரப்பில் சிலர் வீர மரணமடைந்தனர்.

### வவுனியா

வரப்பட்டன என்று தெரிய வருவதாக நமது வவுனியா நிருபர் தெரிவிக்கிறார்.

அனுராதபுரம் நியூ சிற்றி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் அம லுடன் அந்த நிறுவனத்தின் கணக்காளர் லியனமாத்தயா வும், அபாஸ்குட்டி பாரூக் என்ற முஸ்லிம் வர்த்தகரும் கைதாகி உள்ளனர் என நமது நிருபருக்குக் கிடைத்த தகவல் கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கைது செய்யப் பட்ட இராணுவ அதிகாரிகள் கை ஊட்டு வாங்கிய பின்னர், அனுராதபுரம் வர்த்தக முக வர்கள் சிலரின் உதவியுடன் வவுனியா வர்த்தகர்களின் லொறிகளில் தடைசெய்யப் பட்ட பொருள்களை ஏற்றி அனுப்பிவந்தனர்என கொழும் பில் இருந்து வந்த இராணுவ அதிகாரிகள் கண்டுபிடித்துள் ளனர். [தி]

### சீ-நோர்

யினால் சீ-நோர் ஊழியருக் குத் தலா ரூபா 3,000 மார்ச் 7ஆம் திகதி வழங்கப்பட்டுள் ளது. நிலுவையாக உள்ள சம்பளக் கொடுப்பனவு இது வரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புக்குச் சென்றுவர முடியாத காரணத்தால் நிலு வைச் சம்பளத்தை வழங்க முடியவில்லை என்று பிரதிப் பொதுமுகாமையாளர் தெரி வித்துள்ளார்.

சீமெந்து, பரந்தன் இரசா யனக் கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் சம்பளத்தைப் பெறமுடியுமானால், சீ-நோர் தொழிலாளர்களுக்கு ஏன் வழங்கக் கூடாது என்று இல ங்கை வர்த்தகர் ஊழியர் சங் கம் சுட்டிக்காட்டியுள்ளது. மற் றும் இவ்விரு தொழிற்சாலை உபகரணங்களும்சேதமடையா திருப்பதால் மின்சாரம் கிடை த்ததும் வேலைகளை மீளவும் ஆரம்பிக்கலாம். ஆகவே தொழிற்சாலையைமூடவேண் டாம் என்றும் சங்கம் தெரி வித்துள்ளது.

### கடமைக்கு

வில்லை. சம்பளமில்லாத ஆசி ரியர்கள் கவலையுடன் பாட சாலைகளுக்குச் சென்று வரு வதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை, ஊரை விட் டுக் கொழும்புக்கு இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு அவர்கள் அங்கு சென்ற நாள் முதல் தற்காலிகச் சம்பளக் கொடுப்பனவு ஒழுங்காக வழங் கப்பட்டு வருகிறது. மேலும் இவர்களின் சுயவிபரக் கோவைகள் இங்கிருந்து வட-கிழக்கு மாகாண கல்வி அமை ச்சினாலும், கொழும்பு கல் வித் திணைக்களத்தினாலும் அவர்கள் மாற்றம் பெற்றி ருக்கும் இடங்களுக்கு எடுக் கப்பட்டுள்ளன.


# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் குணரத்தினம்

அகால மரணமானார்.

காரைநகரைப் பிறப்பிடமாகவும், உருத்திர புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குணரத்தினம் அகால மரணமானார். இவர் நாக லிங்கம் சின்னம்மாவின் அருமைப் புதல்வனும், காலஞ் சென்ற ஈஸ்வரி, பரமேஸ்வரி, வேலாயுதம், சிவ ஞானம், சங்கரப்பிள்ளை (ஜேர்மனி), தங்கமணி, கமலாதேவி ஆகியோரின் சகோதரரும், சண்முகம் (பரந்தன் அம்பாள் கபே), அருளானந்தம், தியாக ராசா (கிளிநொச்சி அம்பாள் ஸ்ரோர்ஸ்), உமாதேவி, ராசமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நகு லேஸ்வரன், மகேஸ்வரி, சங்கரப்பிள்ளை, சாந்தினி, நேசமலர், சாந்தமலர், அன்புலன் ஆகியோரின் மாமனாரும், மனோகரரின் சிறிய தந்தையுமாவார், அன்னாரின் பூதவுடல் இன்று (05 08-1991) மாலை 5-00 மணியளவில், உருத்திரபுரம் இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
அன்பு மைத்துனர்
மு. தியாகராசா.

10 D, உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

(R-1616)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.